134

# THE STORY OF NAPOLEON.

## நெப்போலியன் சரித்திரம்.



YANATHA AIYAR, B.A.,
MARY'S TOPE,
CHINOPOLY.

V53J87L69
N16
147777

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 - JUL 1916
MADRAS

# THE STORY OF NAPOLEON.

# நெப்போலியன் சரித்திரம்.

## I

இத்தாலியா (Italy) தேசத்திலிருந்து சமுத்திரத்தில் 50 மைல் தூரத்தில் சென்றால் சார்ஸிகா (Corsica) என்ற ஒரு தீவு காணப்படும். இந்தத்தீவில் சார்ல்ஸ் போனபார்ட் (Charles Buonaparte) என்ற ஒருவர் இருந்தார். அவருக்கு 1769-ம் வருஷத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் தேசசரித்திரத்தில் பெரிய கியாதியைப்பெற்ற நெப்போலியன் (Napoleon). அந்தக்குழந்தைக்குப் பல சகோதரர்களும் சகோதரிகளுமிருந்தார்கள்.

குழந்தைப்பருவம் முதலே, நெப்போலியன், 'விளையும் பயிர் முளையிலே' என்ற பழமொழிப்படி சூரனாக விளங்கிவந்தான். தன்னுடைய சகோதரர்களும் சகோதரிகளும் தங்கள் கையில் ஏதாவது பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கையில், நெப்போலியன் மாத்திரம் சுவற்றில், துருப்புக்கள் சண்டைக்குச் செல்வதுபோல் படங்கள் எழுதிக்கொண்டும், சண்டையில் உபயோகிக்கப்படக்கூடிய கத்திகள் முதலிய ஆயுதங்களை கையிலெடுத்து விளையாடிக்கொண்டுமிருப்பான். சுருக்கி

ச்சொல்லுமிடத்து, அவனுக்கு [illegible]வீரனா யிருப்பதைவிட மற்றொன்றும் மனதிற்குப் பிடிக்க வில்லை.

ஐந்து வயதாயிருக்கும்பொழுதே நெப்போலியனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய்விட்டார்கள். கொஞ்சம் படிப்பைக் கற்றுக்கொண்டவுடன், தன்னுடைய பத்தாவது வயதில், சகோதரனாகிய ஜோஸப்புடன் (Joseph) பிரான்ஸ் (France) தேசத்திற்கு அனுப்பப்பட்டான். ஜோஸப் படிப்பில் தேர்ச்சியடைய பிரயாசைப்பட்டான. நெப்போலியனே யுத்தவீரனாயிருக்கவேண்டுமென்றே முயன்றான். கொஞ்சகாலஞ் சென்றபின், ஒரு சிறிய பிரான்சு பட்டாளத்தில் நெப்போலியனுக்கு ஒரு சாதாரணமான உத்யோகம் கொடுத்தார்கள். பிறகு சிறு தலைவனாக நியமிக்கப்பட்டான். அதற்குப்பிறகு பெரிய தளகர்த்தராகவும், அதனபின் தேசத்திற்கு முக்கியமான உத்தியோகஸ்தராகவும், கொஞ்சகாலத்திற்குப்பின்; தேச சக்கிரவர்த்தியாகவும், கடைசியாக, ஐரோப்பா கண்டத்தை நடுநடுங்கச் செய்த ஒரு சிங்கம்போலவும் விளங்கிவந்தான். ஆகவே இவனிடம் ஐரோப்பாகண்டத்திலுள்ள தேசங்களாகிய இங்கிலாந்து, ஜெர்மனி, ருஷியா முதலிய எல்லா தேசங்களுக்கும் அதிகமான பயமும் நடுக்கமும் உண்டாயிற்று. இவ்விதமாகக்கொஞ்சகாலத்தில் உலகமெங்கும் தன் பராக்கிரமத்தை விளங்கச்செய்து விட்டான். கடைசியில், நெப்போலியனை எவ்விதத்

 V53147L69 K116

திலாவது அடக்கிவிடவேண்டுமென்று எண்ணின இங்கிலாந்து முதலிய மற்ற தேசத்தார், ஒன்றுகூடி நெப்போலியனோடு பல சண்டைகள்போட்டு, மிகவும் பிரயாசையுடன் கடைசியாக வாடர்லூ (Waterloo) சண்டையில் அவனைத் தோற்கடித்து, கைதியாகப் பிடித்து, அவனைத் தென் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலுள்ள ஸெண்ட் ஹெலினு (St. Helena) என்னும் ஓர் சிறு தீவில் ஆயுள்பரியந்தம் அடைத்து விட்டார்கள்.

## II

ஆதியில் நெப்போலியன் ஒரு சிறு பையனாக விருந்து, பிரான்ஸில் தன்னை ஓர் போர்வீரனாகப் பழக்கிக்கொள்ள வேண்டுமென்று எண்ணி அங்கு யுத்தத்திற்குவேண்டிய விஷயங்களையெல்லாம் கற்றுக்கொண்டிருக்கும்பொழுது, பிரான்ஸ் தேசத்தில் அநேக மாறுபாடுகள் உண்டாயின. அவ்விடத்தில் அரசனின் அதிகாரத்துக்கு எல்லையில்லை. அவன் தன் னிஷ்டப்படி எதுவானாலும் செய்யலாம். அவனுக்குக் கீழே, ஜனங்களுள் மூன்று பதவிகள் இருந்தன. அவைகளில் உயர்ந்தது, கௌரவஸ்தர்களான (nobles) பிரபுக்களின் பதவி; அடுத்தபடி குருமார்களின் பதவி (clergy); கடைசியாகப் பொதுஜனங்களின் ஸ்தானம். முதல் இரண்டு கூட்டத்தாரும் வரி செலுத்தவேண்டுவதில்லை; அவர்கள் அதிகாரம்பெற்றவர்கள். அவர்களும் அரசனும், வேண்டியமட்டும் ஏராளமான திரவியத்தைச் செலவிடலாம். அப்

படிச் செலவுசெய்யத் தேவையான பணத்தைப் பொது ஜனங்களிடமிருந்து வசூலித்து வந்தார்கள். இம்மாதிரியாக ஒரு வருஷத்தைக்காட்டிலும் மற்றொரு வருஷம் அவர்கள் அதிகமாகச் செலவிட்டால், அப்படியே ஒருவருஷத்தைக்காட்டிலும் மற்றொரு வருஷம் பொது ஜனங்களும் மிகவும் அதிகமாக அரசுக்குச் செலுத்தவேண்டியிருந்தது. வருஷங்கள் செல்லச்செல்லக் குடிஜனங்களும் மிகவும் வருத்தப்பட்டுச் சலிப்படைந்து, அதிகமான கோபத்தையுங்கொண்டார்கள். கடைசியாக 1789-ம் வருஷத்தில் ஜனங்களெல்லோரும் பாரிஸ் நகரத்தில் அதிக மூர்க்கமாகக் கிளம்பி, வீராவேசங்கொண்டவர்கள் போல் அலைந்து, சிறைச்சாலைகளையெல்லாம் தாங்களாகவே திறந்துபோட்டார்கள். இம்மாதிரி ஜனங்களெல்லோரும் கோபத்துடன் கர்ஜித்துக்கொண்டு அநேக கலகங்களைச் செய்துவந்தார்கள். பிரான்ஸ் தேசத்தரசனைச் சிங்காசனத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். கடைசியாக எங்கும் நியாயமென்பதேயில்லாமல், எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. ஆகையால் என்ன செய்வது என்று ஜனங்களுக்கே தெரியவில்லை.

பிறகு, பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய அரசனையும் அரசியையும் சிறைச்சாலையிலடைத்து, தேசத்திலும் கலகம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்த, ஐரோப்பாகண்டத்தைச்சேர்ந்த சில சிற்றரசர்களும அரசர்களும் ஒன்றுகச்சேர்ந்துகொண்டு, பிரெஞ்சுக்காரர்கள் மறுபடியும் தங்களுடைய அர

சனைச் சிங்காசனத்தில் வைக்காவிட்டால், தாங்கள் அவர்களின்மேல் படையெடுப்பதாகப் பயமுறுத்தினார்கள்.

ஆனால், முதலில் அவர்கள் சண்டைக்கு இழுக்குமுன் பிரான்சுதேசத்து ஜனங்கள் தங்களுடைய அரசனையும் அரசியையும் கொலை செய்துவிட்டார்கள். அதற்கு, இரண்டு வாரங்களுக்குப் பிறகு பிரிட்டன் தேசத்தார், நேசதேசத்து அரசர்களைச் சேர்த்துகொண்டு பிரான்ஸ்தேசத்து ஜனங்களுடன் சண்டைசெய்ய ஆரம்பித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் சில பிரெஞ்சுக்காரர்களுங்கூட பிரிட்டனோடு சேர்ந்துக்கொண்டபடியால், இதர பிரஞ்சுக்காரர்களெல்லோரும், தங்களுடைய சத்துருக்களோடு மட்டு மல்லாமல், தங்களுடைய தேசத்தாரோடும் சண்டைபோடவேண்டியதாயிற்று. அப்படி, பிரிட்டனோடு சேர்ந்துக்கொண்டு சொந்ததேசத்திற்கு வினை வைத்தவர்கள் யாரெனில், டூலன் என்ற ஒரு பட்டணத்திலிருந்த ஜனங்கள் தான். இந்த சமயத்தில் நெப்போலியனானவன் பிரெஞ்சு தேசத்துக் கலகக்காரர் கக்ஷியின் சேனையில் கமாண்டர் வேலை வகித்து மிகவும் சாமர்த்தியமாக நடத்தி வந்தான். டூலனிலுள்ள கோட்டையானது பிரிட்டிஷாரிடம் இருக்கவே, நெப்போலியன் தன்னுடைய சேனையுடன் அந்தப்பட்டணத்தை முற்றுகைபோட்டான். உடனே தனக்கு வேண்டிய குண்டுகள் மருந்துகள் முதலியவைகளையெல்லாம் சேகரித்துக்

கொண்டு சண்டை யாரம்பித்தான். மிகுந்த தைரியத்துடனும் பலத்துடனும் வெகு உறுதியாக லா எஜிலேட் என்னும் ஒரு கோட்டையைப் பிடித்துக் கொண்டு, பிறகு இரண்டு நாட்களுக்குள் அவன் தான் நினைத்தபடியே (Toulon) டூலனை சுயேச்சையாக அடைந்தான். பிரிட்டிஷ்கப்பல்கள் இதுவரையில் டூலன் நகரத்தாருக்கு உதவி புரிந்துவிட்டு இப்பொழுது வெளிக்கிளம்பவே, டூலன் நகரத்தார்களும் கலகக்கக்ஷிக்காரர்களிடம் மிகவும் பயந்து கொண்டு, பிரிட்டிஷாருடனேயே சென்றுவிடத் தயாராயிருந்தார்கள் அப்படியே அவர்கள் மிகுந்த சேதத்துடன் ஓடிவிட்டார்கள் பிறகு நெப்போலியன் டூலன் நகரத்தையும் பிடித்துக்கொண்டான். இந்த சந்தர்ப்பத்திற்றான் நெப்போலியனுக்கு நல்ல கியாதியும் பெயரும் கிடைத்தன.

## III

கொஞ்சநாட் சென்றவுடன் நெப்போலியன் இத்தாலியாவுக்குப் போகும்படி நேரிட்டது. ஏனெனில் அவ்விடத்தில் ஆஸ்த்திரியர்களும் ஸார்டீனியர்களும் சேர்ந்து சண்டைக்குத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்வளவு பெரிய சேனைகளைத்தான் எதிர்க்க சக்தியற்றவனா யிருந்தபடியால், நெப்போலியன் ஒரு யுக்தி செய்து, எதிரிகளைத் திடீரென்று அவர்கள் வருவதற்கு முன் எதிர்க்கவேண்டுமென்று நினைத்தான். ஆகவே, தான் தன்னுடைய

சேனையை வெகு விரைவாக நடத்திக்கொண்டு போய், எதிரிகளை ஒருவரோடொருவர் சேரவொட்டாமல் தடுத்துப், பல விடங்களிலும் பல தோல்விகளடையும்படி செய்தான். உடனே இத்தாலியா முழுவதும் நெப்போலியன் கைக்குள் அகப்படவே, சமாதனம் செய்துகொள்ளப்பட்டது. அப்பொழுது (Campo Formio) காம்போ போர்மியோ உடன்படிக்கை நடந்தது. அதனல் பிரான்ஸ் தேசத்திற்கு அநேக இதர தேசங்கள் கொடுக்கப்பட்டன. மேலும் நெப்போலியனுடைய பெயரும் கீர்த்தியும் பிரவாகமாகியது. காம்போ போர்மியோ உடன்படிக்கையான பிறகு, நெப்போலியன் பாரிசுக்குப் போய் விட்டான். அப்பொழுது அவ்விடத்தில் இவனை எல்லோரும் மிகுந்த மனமகிழ்ச்சியுடனும் அளவிடா ஆநந்தத்துடனும்வரவேற்றார்கள். மேலும் இவன் வசித்த தெருவிற்கு, "ஜயம் பெற்ற தெரு" என்று பெயரிட்டார்கள். பிறகு அந்த தேசத்திலுள்ள இதர சிற்றரசர்களும், ராஜாக்களும், நெப்போலியனிடம், அடங்காத ஆத்திரத்தைக் கொண்டார்களென்றாலும், அவனிடத்தில் அவ்வளவுக்கவ்வளவு பயப்படவேண்டியிருந்தது.

## IV

இந்த சமயத்தில் பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் கடுமையான விரோதம் ஏற்பட்டிருந்தது. ஆகையால் பிரெஞ்சுக்காரர்கள் எப்படி

யாவது பிரிட்டிஷாரை ஜயிக்கவேண்டுமென்று மிக வும் ஆவல்கொண்டிருந்தார்கள். அதற்காக, நெப் போலியன், தான் ஏற்கனவே நினைத்திருந்தபடி, எப் படியாவது ஈஜிப்ட் தேசத்தைக் கைக்கொண்டு, அதில் தானிருந்தபடியே, அடிக்கடி கடல்மார்க்கமாகச் செல் லும் பிரிட்டிஷாரின் வியாபாரத்தை அடியோடு முறித்துவிடவேண்டுமென்று யோசித்தான். உடனே அன்னவன் தன் தேசத்திலிருந்து இருபது ஆயிரம் போர்வீரர்களைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டு அவர்களுடன் அலக்ஸாண்ட்ரியா (Alexandria) விற்குப்புறப்பட்டான். இதையறிந்த பிரிட்டிஷாரும் நெப்போலியனை எப்படியாவது தொலைக்கவேண்டு மென்று எண்ணித் தங்களுக்குள் ஒரு சேனையைச் சேர்த்து, அதற்கு நேல்ஸன் (Nelson) என்பவரைக் கமாண்டராக (Commander) நியமித்து அனுப் பினார்கள். ஆனால் அவர்கள் கப்பலில் செல்லும் பொழுது காற்று சரியாயில்லாதபடியால் அவர்கள், போனவழியில் ஒரு தீவில் தங்கும்படி நேரிட்டது. ஆனால் நெப்போலியன் மிகவும் ஜாக்கிரதையாக எல் லோருக்கும் முந்தி அலெக்ஸாண்டிரியாவிற்குப் பர பரப்புடன் ஓடிவந்து, தன்னுடைய சேனைகளுடன் தேசத்தை எதிர்க்கவே, அங்கிருந்த துருக்கர்களும் அராபியர்களும் கொஞ்சநேரம்வரையில் தைரியமா ய்ச் சண்டைசெய்தார்கள். ஆனால் வெகு சீக்கிரத்தில் பிரெஞ்சுக்கொடி அங்கு பறந்துகொண்டிருந்தது. பிறகு செய்ரோவுக்குப் போக வேண்டுமென்று நெப்

போலியன் புறப்பட, நடுவழியில் மாமிலூக் என்ற எஜிப்தியர்களை எதிர்க்கும்படி நேரிடவே, அவர்களையும் சூட்சுமமான சண்டையால் தோல்வியடையும்படி செய்தான். அதன் பிறகு கேய்ரோவிற்குச் சென்றான். அவ்விடத்தில் நெப்போலியன் தோல்வியடைந்தான். அவனுக்கு நல்ல சேனைகள் இல்லை. மேலும் தன்னுடைய கப்பல்களெல்லாம் நேல்ஸனால் நாசமாக்கப்பட்டன. இதுதான் நயில் நதிச்சண்டை (Battle of the Nile) எனப்படும். இந்த சண்டையிலும், இதற்கடுத்த படி (Acre) ஏகர் என்றவிடத்தில் நடந்தசண்டையிலும் பிரெஞ்சுக்காரர்கள் நன்றாகத் தோற்கடிக்கப்பட்டனர். அந்த சமயத்தில் நெப்போலியனுக்கு அதிகமான கோபம் ஜனித்திருந்தது ஆகவே அவன் தன்னுடைய சைனியங்களை ஈஜிப்திலேயே விட்டுவிட்டுத், தான்மட்டும் சிலருடன் பிரான்ஸ் தேசத்திற்குச் சென்றுவிட்டான்.

## V

இப்பொழுதும் முன்போலவே, நெப்போலியன் அதிகமான விசுவாஸத்துடன் வாழ்த்தப்பட்டான். முன்னிருந்ததைக்காட்டிலும் உன்னதமான பதவி இவனுக்கு ராஜ்ஜியத்தில் கொடுக்கப்பட்டது. ராஜ்யத்தில் எல்லோரும் சமாதானமாகவே இருந்தார்கள். என்றாலும் சிற்சில விடங்களில் சண்டைகளும் கலகங்களும் இருந்துகொண்டே வந்தன. அதற்குள் முக்கியமாக ஆஸ்திரியர்கள்தான் அதிகமான உக்

ரத்துடன் இத்தாலியில் எதிர்ப்பதற்குத் தயாரா யிருந்தார்கள். ஆனால் அவர்களுக்குமுந்தி நெப் போலியன் யுத்தகளத்திற்குச் செல்ல பிரயத்தனப் பட்டுத், தன்னுடைய சேனையுடன் ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி 'மாரங்கோ' (Marengo) என்றவிடத்திற்கு ச்சென்று யுத்தத்தை ஆரம்பித்தான். ஆஸ்திரியர் களும் மிகுந்த உக்கிரமாகவே சண்டை செய்தபடி யால், அவர்களை வெல்ல முடியவில்லை. பிரெஞ்சுக் காரர்கள் பலமுறை திருப்பி யடிக்கப்பட்டார்கள். ஆஸ்திரிய சேனைத்தலைவன் 80-வயது சென்ற ஒரு கிழவனானபடியால் அவனுக்குச் சண்டை வெகுநேரம் வரையில் செய்ததால் களைத்துவிட்டது. பிறகு அவன் தனக்கு ஜெயம் உண்டாகிவிட்டதென்று எண்ணிக் கொண்டு யுத்த களத்தினின்றும் நீங்கினான். ஆனால் அந்த சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் திடீரென்று அவர்களுக்குட் புகுந்து அவர்களை அடியோடு நசுக் கித், தங்கள் கையிலிருந்து சென்ற இத்தாலியாவை மறுமுறை ஜயித்தார்கள். இவ்விதமாக நெப்போலி யன் உலகமுழுவதும் தன்னுடைய பயங்கரமான பெயரையும் கீர்த்தியையும் பரப்பிவிட்டுத், தான் பாரிஸ் நகரத்திற்குச் சென்றான். கொஞ்சகாலத் திற்குப் பின் பிரெஞ்சுக்காரர்கள் ஐரோப்பா கண்ட முழுவதிலும் சமாதானம் செய்துகொண்டனர்.

நெப்போலியன் பிரான்சுக்குச் சென்றவுடன் அவனை அந்த தேசத்திற்கு 1804-ம் வருஷம் மே-மீ 18-ம் தேதி யன்று சக்கரவர்த்தியாக ஏற்படுத்தினார்கள்.

சிலவருஷங்களுக்குமுன் கையில் ஒரு காசு கூட இல்லாமல் தெருவில் அலைந்துகொண்டிருந்த நெப்போலியன் தான், இப்போது சக்கரவர்த்தி. இவன் கொஞ்சநாள் சிங்காசனத்தில் சமாதானமாக வீற்றிருந்தான். பிறகு இதிர தேசங்களில் கலகம் உண்டாகிவிட்டது. ஆஸ்திரியா, ருஷியா, ஸ்வீடன் ஆகிய இத்தேசத்தார் ஒன்று கூடி நெப்போலியனை எதிர்க்க யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஸ்பெயினும் இங்கிலாந்தும் விரோதமாயிருந்தபடியால், ஸ்பெயின் பிரான்ஸோடு சேர்ந்து கொண்டது. இஃதிப்படியிருக்க, ருஷியா சக்கரவர்த்தியானவர், பிரெஞ்சுக்காரருடன் சண்டை செய்யும்படி, ஆஸ்த்திரியர்களுக்கு உதவியாகத் தன் சைனியத்தை அனுப்பித்தார். ஆனால் அந்தச் சேனை வந்து சேருவதற்கு முன்னமேயே ஆஸ்திரியர்கள் சண்டையைத் துவக்கினார்கள். சண்டையில் ஆஸ்திரியர்கள் பலமான தோல்வியடைந்து பிரெஞ்சுக்காரர்களுக்குக் கீழ்ப்படிந்து விட்டார்கள். மறுபடியும் ருஷியர்களும் ஆஸ்திரியர்களும் சேர்ந்து நெப்போலியனோடு சண்டையிட்டதில் அவனே ஜயித்தான். ருஷியர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குச் சென்றார்கள். ஆஸ்திரியர்களோ, ப்ரேஸ்பர்க்கில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு அதினின்றும் நெப்போலியனுடைய ஆளுகைக்கு அதிகமான பிறதேசங்களை விட்டார்கள். பிறகு நெப்போலியனும் தன்னுடைய சகோதரர்களையே வெளி தேசங்

களில் அரசர்களாக நியமித்தான். அதன் பிறகு ஒரு சமயம் ப்ரஷயாவில் சண்டை ஏற்பட்டது. அதில் நெப்போலியன் 83 ஆயிரம் போர்வீரர்களுடன் யுத்தத்திற்கு வந்து ஜீனு என்னுமிடத்திலும் ஆரஸ்டாட் என்னுமிடத்திலும் இரண்டு சண்டைகள் செய்து ப்ரஷ்யர்களை அடியோடு முறியடித்தான். கடைசியாக ஓர் உடன்படிக்கை நடந்தது.

நெப்போலியன் இப்பொழுது மிகவும் உத்ஸாகமாகவே இருந்தான். அவனுக்கு 1811ம் வருஷத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. உடனே அதற்கு ரோமாபுரியின் அரசனென்ற பட்டஞ் சூட்டிவிட்டான்.

இஃதிப்படியிருக்க, நெப்போலியன், ருஷியா தேசத்தாரைப் பிரிட்டிஷாருடன் வியாபாரஞ் செய்யக்கூடாதென்று கடுமையாக உத்திரவிட்டிருந்தான். ஆனால் ஜனங்கள் அதன்படி நடக்கவில்லை. ஆகவே பிரிட்டிஷாரின் சாமான்கள் ஏராளமாக ருஷியாவிற்குள் வரவே, நெப்போலியனுக்குக் கோபம் மிகுதியாயிற்று. பிறகு அவன் தன்னுடைய முழுபலத்தைக் கொண்டும் ருஷியர்களை நசுக்கி விடுவதாகத் தீர்மானித்தான். அதற்காக நெப்போலியன் ஆறு லக்ஷம் போர்வீரர்களடங்கிய ஒரு பெரிய சேனையை தயார் செய்தான். அவனுக்கு மேலும் உதவி செய்வதாகாக ஜெர்மனி, ப்ரஷ்யா, ஆஸ்த்திரியா, ஹாலெண்ட், பெல்ஜியம், இட்டாலி, போலண்டு, ஸ்விட்சர்லாண்டு, ஸ்பெயின், போர்த்துகல் முதலிய தேசங்களிலிருந்

தும் சேனைகள் வந்தன. பிறகு, பெருத்த சேனையுடன் நெப்போலியன் ருஷியாவிற்குச் சென்றபொழுது, அங்கு ஜனங்கள் எல்லோரும் ஓடிவிட்டார்கள். போகும் வழி மிகவும் கடினமாயிருந்தது. மத்தியில் அநேகம் கடுமையான சண்டைகளும் நடந்தன. அவைகளுள் முக்கியமானதும், கொடூரமுமான சண்டை, போராடினோ என்ற விடத்தில் நடந்தது. கடைசியாக நெப்போலியன் ஒரு சிறு மலைக்குன்று மேலிருந்து மாஸ்கோப் பட்டணத்தைக் கண்டதும், அப்பட்டணம் மிகவும் சிறந்தவைகளுளொன்றாகத் தோன்றினது. அவ்விடம் நெப்போலியன் சென்றதும், ஜனங்கள் ஒருவராவது வீடுகளிலில்லாததைக் கண்டான். பட்டணம் காலியாயிருந்தது. உடனே சத்துருக்கள் அநேக வீடுகளில தீயிட்டு சிறைச்சாலைகளிலிருந்த கைதிகளெல்லோரையும் வெளியே விட்டுவிட்டார்கள். அநேக மெஷின்களும் எஞ்சின்களும் நாசமாக்கப்பட்டன. நெப்போலியனுடைய சேனைகள், இரண்டுமூன்று தினங்கள் வரையில், பட்டணத்தின் நாலாபக்கங்களிலும் தீயிட்டார்கள். கடைசியாகப் பட்டணத்தில் ஐந்தில் ஒரு பாகந்தான் நெருப்பிலகப்படாமலிருக்கும்போது, பெரிய தீ அணைந்தது. நெப்போலியன், பிறகு நகரத்திற்கு வெளியே ருஷிய சக்கிரவர்த்திக்குச் சொந்தமான ஒரு அரண்மனையில் வசித்தான். அங்கிருந்தபடியே நெப்போலியன் தன்னோடு ருஷியதேசத்து அரசன் சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று, அவனுக்குக் கடிதம் எழுதி

யிருந்தான். ஆனால் பதில் ஒன்றும் வரவில்லை. அநேக தினங்கள் கழிந்தன. முதலில் கொஞ்சம் ஆகாரம் எல்லோருக்கும் கிடைத்தது. பிறகு ஒன்றும் அகப் படவில்லை. நெப்போலியன் சில குடியானவர்களைத் தங்களுக்கு ஏதாவது ஆகாரம் கொடுக்கும்படி கேட் டான். ஆனால் அவர்கள், தேசத்திலுள்ள பொன் முழுவதையும் கொடுத்தாலுங்கூட, ஆகாரம் கொ டுக்கமுடியாதென்று சொல்லிவிட்டார்கள். வெகு நாள்வரையில் மிகவும் உஷ்ணமான காலமாக இருந் தது. பிறகு மழைகாலம் ஆரம்பித்தது. அப்பொ ழுது பிரெஞ்சுக்காரருக்குப் போதுமான உணவு, உடை முதலியவைகளேதுமில்லை. நெப்போலியன் மறுபடியும் அலெக்சாந்தருக்குக் கடிதமெழுதினான். அப்பொழுதும் பதில் கிடைக்கவில்லை. ஆகையினால், நெப்போலியன், தான் தன்னுடைய சேனையுடன் வெகு தூரத்தில் வந்து ஆகாரம் வஸ்திரம் முதலிய வைகள் ஒன்றுமில்லாமல் குளிர்காலத்தில் கஷ் டப்படுவதைக் காட்டிலும், திரும்பி விடுவது நல மென்று யோசித்து, அப்படியே புறப்பட்டுவிட்டான். வியாதியஸ்தர்களும் காயப்பட்டவர்களும் பின்னால் தங்கிவிட்டார்கள். வரும்பொழுது பிரெஞ்சுக்காரர் கள், ஏராளமான பொன் வெள்ளி முதலிய உயர்ந்த சாமான்களை யெடுத்துக்கொண்டு, சில ருஷியக்கைதி களின் மேல் சுமையைபோட்டு அவர்களையே எடுத்து வரும்படி சொன்னார்கள். ஆனால் எல்லோருக்கும் ஆகாரம் கிடைப்பது அரிதாயிருந்தது. அநேகர்

தங்களுடைய ஆசாரத்திற்காக அலைந்து அகப்படாமல் மாண்டனர். இந்த சந்தர்ப்பத்தில் பனியும் கொடுமையான குளிரும் ஏற்பட்டுவிட்டன. சேனையில் ஒழுங்கின்மை அதிகரித்தது. அப்பொழுது இவர்களைப் பின்னால் விரட்டிக்கொண்டு வந்த ருஷியர்களும் அடிக்கடி பின்றொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களுடன் சண்டையிட்டுக்கொண்டு வந்தார்கள். கடைசியாகப் பிரெஞ்சுக்காரர்கள் முன்னோட்டம் ஓடி, இரண்டு பாலங்களைத் தாண்ட வேண்டியிருந்தது. அந்த சமயத்தில் ருஷியர்கள் கொடுமையாகச் சண்டையிட்டார்கள். அதில் சில பிரெஞ்சுக்காரர்கள் பசியாலும் பயத்தாலும் ஒன்றும் தெரியாமல் ஒருவரையொருவரே அடித்துக்கொண்டு ருஷியர்களின் குண்டுகளால் இறந்தனர். பனிரண்டாயிரம் ஜனங்கள் சேதமான பிறகு, மிகுந்தவர்கள் தப்பித் தடுமாறி மெள்ளமெள்ள வில்னாநகரத்திற்கு வந்தார்கள். அங்கு வந்ததும், பாரிஸில் ஒரு கலகம் ஏற்பட்டதாக சமாசாரம் எட்டியபடியால் நெப்போலியன் தன்னுடைய பரிவாரங்களை அங்கே விட்டுவிட்டுத் தான்மட்டும் ஒருவருமறியாமல் வெகு வேகமாகப் பாரிஸ் நகரத்திற்குப் போய்விட்டான்.

V53147 L6 N16

## VI

நெப்போலியன் ருஷியாவிற்குப்போனபொழுது இருந்த சேனையில் ஆறில் ஒரு பங்கு தான் பிரெஞ்சுக்காரர்கள். அந்த ஜாதியில் முக்கியமான போர்

வீரர்களெல்லோரும் உயிருடன் பிழைத்து வந்து விட்டார்கள். ஆகவே நெப்போலியன் மறுபடியும் வெகு சீக்கிரத்தில் ஒரு சைனியத்தைத் திரட்டுவது சுலபமாயிருந்தது. மேலும் நெப்போலியன் என்னும் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே, போர் வீரர்களெல்லோரும் அவனுடன் சேர இச்சித்தார்கள். இப்பொழுது ப்ரஷ்யா தேசத்தார் தங்களை நெப்போலியனுடைய ஆளுகையிலிருந்து விடுவித்து கொள்வதற்காகச் சண்டை போடத் தயாராயிருந்தார்கள். நெப்போலியனும் ப்ரஷ்யாவிற்குச் சென்றான். அங்கு எதிரிகளின் சைனியம் அதிகமாகவும் வலுவாகவுமிருந்தபடியால், நெப்போலியன், கஷ்டப்பட்டு சண்டை செய்துங்கூட, கடைசியாக லீப்ஸிக் என்னுமிடத்தில் முறியடிக்கப்பட்டான் பிறகு நெப்போலியன் தன்னுடைய பெரிய சைனியத்திலிருந்து சுமார் நாற்பதாயிரம் மனிதர்களோடு மட்டும் திரும்பி பிரான்ஸ் தேசத்திற்கு வந்தான். நெப்போலியனால் ஏற்கனவே ஜெயிக்கப்பட்ட தேசத்தாரெல்லாரும் இப்பொழுது பிரெஞ்சுக் கொடியை எடுத்து விட்டு, அவரவர்களின் தேசக்கொடியைப் போட்டுக்கொண்டார்கள். மேலும் பிரிட்டிஷார், இப்பொழுது, நெப்போலியனைத் தங்களுடன் சமாதானம் செய்து கொள்ளக்கேட்டார்கள். ஆனால் நெப்போலியன் ,சமாதானம் செய்து கொள்வதனால் தன்னுடைய நாடுகளிற் பெரும்பாகம் தன்னை விட்டுப் போவதாயிருந்ததால், அதற்கு ஒப்புக்கொள்ள

வில்லை. உடனே மற்றொரு யுத்தம் ஆரம்பித்து விட்டது. நெப்போலியன் இதுவரையில் போட்ட சண்டைகளில், தன்னுடைய சைனியங்களே அதிக மாகவும் நல்ல பலமுள்ளதாகவும் இருந்திருக்க, இப் பொழுது வரவர, சைனியங்களும் குறைந்துவிட் டன ; இருப்பவர்களும் பழக்கமில்லாதவர்கள். ஆகவே நெப்போலியன் சண்டைகளில் அபஜெய மடைந்து அயலூருக்கு ஓடிவிட்டான். பாரிஸ் நகரம் முழுவதும் நாசமாக்கப்பட்டது ப்ரஷியர் கள், ருஷியர்கள், ஆஸ்திரியர்கள், டச்சுக்காரர்கள் முதலிய பலர் பாரிஸ் நகரத்தில் புகுந்து வீடுகளை யும் கட்டடங்களையும் பொசுக்கி, ஜனங்களையும் கொன்று வந்தார்கள். கொஞ்சநேரத்திற்குப் பின்பு பாரிஸ் படிந்துவிட்டது இவ்விதமாக 1814-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியன்று ருஷியா சக்கிரவர்த்தியும் ப்ரஷ்யா தேசத்தரசனும் மிகவும் உல்லாசமாக நகரத்திற்குள் பிரவேசித்தார்கள். அப்பொழுது ஜனங்களெல்லோரும் அந்த இரண்டு அரசர்களுக்கும் வாழ்த்துக்கூறினார்கள்.

ஐரோப்பா கண்டத்தில் சரி பாதிக்குச் சக்கிர வர்த்தியாயிருந்தவனும், ராஜாக்களைத் தானுகவே நிய மிக்கவும் எடுக்கவும் சக்தியை யடைந்திருந்தவனும், கொஞ்சகாலத்தில் பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்த வனுமான நெப்போலியனுக்கு இப்பொழுது தன்னு டைய பிரதான பட்டணங்கூட சொந்தமில்லை. அதே பாரிஸ்நகரத்தில், சபையோர்களெல்லோரும் 1814-ம்

வருஷம் ஏப்பிரல் மாதம் 2-ம் தேதி தினம் கூடி, அன்று முதல் நெப்போலியன் தங்களுக்கு அரச னல்ல என்பதை ஸ்தாபித்துவிட்டார்கள். இருந் தாலும் நெப்போலியனுக்கு சக்கிரவர்த்தி என்னும் பட்டத்தை மட்டும் எடுக்கவில்லை. அவனை எல்பா என்னும் ஒரு தீவில் அரசாளும்படி உத்திரவு கொடுத்து அனுப்பிவிட்டார்கள். அப்படியே அவன் மனந்தாங்காத வருத்தத்துடன் எல்லோருக்கும் வந் தனமளித்துவிட்டு, எல்பாவிற்குச் சென்றான். அந் தத்தீவு 19 சதுரமைல்களுக்கு மேலிராது. அதில் சாதாரணமான வீடு போன்ற ஒரு அரண்மனையை யும், சில நூறு போர் வீரர்களையும் மாத்திரம் அவனுக்குக் கொடுத்தார்கள்.

## VII

இப்பொழுது ஐரோப்பா முழுவதும் ஒரு முறை தலைகீழாக மாறியிருந்தது. ஜெர்மானியர்க ளுடைய கோட்டைகளில் கைதிகளாக அடைக்கப் பட்டிருந்த பிரெஞ்சுப் போர் வீரர்களெல்லோரும் இப்பொழுது விடுவிக்கப்பட்டவுடன், அநேக வரு ஷங்களாகச் சண்டையிலேயே பழக்கப்பட்ட அவர் கள் இப்பொழுது சமாதானமாயிருக்கமுடியவில்லை. ஆகவே அவர்கள் தங்களுடைய பெயர்பெற்ற சேனா திபதியை மறுபடியும் விரும்பினார்கள்.

எல்பாவென்னும் ஒரு சிறிய தீவில் அடைக்கப் பட்ட நெப்போலியனும், தான் மறுபடியும் ஒரு

முறை சண்டை செய்து ராஜ்ஜியத்தைக் கைக் கொள்ளவேண்டுமென்று நினைத்தான். அவன் அவ் விடம் சென்று 11 மாதகாலங் கழித்துவிட்டுப், பிறகு மெதுவாக அந்தத் தீவிலிருந்து கிளம்பி சானிஸ் என்றவிடத்தில் இறங்கினான். க்ரேனேபிள் என்னு மிடத்தில் வந்து, தனக்குக் கொஞ்சம் சேனையைச் சேர்த்துக்கொண்டு தன்னுடைய தேசத்திற்குச்சென் றான். அப்பொழுது மிகவும் தைரியமாக நெப்போ லியன் தோன்றியபடியால், அவனுடனிருந்த சேனை, கொஞ்சங் கொஞ்சமாக அதிகரிக்க வாரம்பித்தது. பெரிய ஆடம்பரத்துடன் நெப்போலியன் வருவ தைக் கண்ட, பிரான்ஸ் தேசப் புது அரசனான லூயி அரசனும், பாரிஸை விட்டு பெல்ஜியத்திற்கு ஓடி விட்டான். அச்சமயத்தில் நெப்போலியன் மிகவும் சுலபமாக பாரிஸ் நகரில் புகுந்துவிட்டான். ஏற்க னவே ஒழுங்கீனமாயிருக்கும் ஐரோப்பாவை, ஒரு சமாதானத்தில் வைக்கவேண்டுமென்று நினைத்து நேசத்துருப்புகளும் அரசர்களும் வியன்னாவில் கூடி யிருக்கும்பொழுது, நெப்போலியன் சைனியத்து டன் பாரிஸ் நகருக்குச் செல்வதைக் கேள்வியுற்ற வுடன் மிகவும் பயந்து, உடனே நாலாப்பக்கங்களிலி ருந்தும் பிரான்ஸின் மேல் சைனியங்கள் படை யெடுக்கும்படி செய்துவிட்டார்கள். அப்படியே ருஷியா, ப்ரஷ்யா, ஸார்டீனியா, ஆஸ்டிரியா, ஹாலெண்ட், பெல்ஜியம், ஜெர்மனி முதலியதேசங் களிலிருந்தும்பிரிட்டனிலிருந்தும் ஏராளமான சைனி

யங்கள் கூடின. நெப்போலியன், தான் முன் போலவே நன்றாக யுத்தம் செய்யலாமென்றும், மறுபடியும் பிரான்ஸின் சிங்காசனத்தில் ஏறியிருக்கலாமென்றும் எண்ணிக்கொண்டு, நேசத்துருப்புகளுடன் சண்டை செய்வதற்காகப் பெல்ஜியத்திற்குச் சென்றான். அப்பொழுது ட்யூக் ஆவ் வெல்லிங்க்டன் (Duke of Wellington) என்பவர் எதிரிக் கக்ஷியில் சேனாதிபதியாயிருந்தார்; ப்லூச்சரும் ப்ரஷ்யச்சேனைகளை நடத்தினான். இவ்விதமாகப் பெரிய சேனைகள் திரண்டு வந்து 1815-ம் வருஷம் ஜூன் மாதம் 18-ம் தேதி தினம், வாடர்லூ என்னுமிடத்தில் நெப்போலியனோடு பெரிய யுத்தம் செய்ததில், நெப்போலியன் முற்றிலும் அபஜயமடைந்தான். இது தான் இவனது கடைசிச் சண்டை. எதிரிகள் எல்லோரும் மிகுந்த வீராவேசத்துடன் சண்டையிட்டார்கள். ஆனால் நெப்போலியனுடைய போர்வீரர்கள் எதிரிகளைக் கண்டு பயந்து, மனங்கலங்கிப் பின்தாங்கி விட்டார்கள். ஆகவே எதிரிகளும் வெகு சுலபமாக பிரெஞ்சுக்காரர்களை முறியடித்துவிட்டார்கள். உடனே நெப்போலியன் உலகத்திலுள்ள, தன்னுடைய எல்லாவற்றையும் இழந்துவிட்டுத், தான் மட்டும், கோபத்தினாலும், உதவியின்மையாலும் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்துகொண்டே, பாரிஸ் நகரத்திற்கு ஓடி வந்து சேர்ந்தான். நெப்போலியன், பிரெஞ்சு சேனையை இழந்துவிட்டுத், தான் மட்டும் தோல்வியடைந்தவனாய்ப் பாரிஸுக்கு வந்த செய்தி

யானது அவ்விடத்தில் பரவினவுடன், ஜனங்களெல்லோரும் அவனை வெறுத்தார்கள்; மேலும் அவன் பிரான்ஸ் தேசத்திலேயே இருக்கக்கூடாதென்று உத்திரவும் இட்டு விட்டார்கள். நெப்போலியன் வெளியே தப்பித்து ஓடாமலிருக்கும்படி பிரிட்டிஷ் போர்க் கப்பல்களும் தயாராகத் துறைமுகங்களில் கவனித்துக் கொண்டிருந்தன. கடைசியாக அவன், தானுகவே 'பெல்லராபன்' என்றவொரு பிரிட்டிஷ் கப்பலின் தளகர்த்தரிடம் அடைக்கலம் புகுரவே, அவர் இவனை இங்கிலாந்திற்கே கொண்டு போய்விட்டார். போகும்பொழுது நெப்போலியன், பிரான்ஸ் தேசமானது தன் கண்களினின்றும் கொஞ்சங் கொஞ்சமாகக் மறைவதை மிகவும் மனவருத்தத்துடன் கவனித்தான். இதற்குப் பிறகு அவன் உயிருடன் அந்த தேசத்தில் காலடி வைக்கவில்லை.

நெப்போலியன், இங்கிலாந்து (England) முழுவதையுங் கூட ஜயித்துத் தன்னுடைய தேசத்தோடு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று ஒருசமயம் மனோராச்சியம் செய்திருந்தான். அப்பேர்பட்ட நெப்போலியன் இப்பொழுது அந்த பிரிட்டிஷ் தீவுகளின் எல்லையை மிதிக்கக்கூட முடியவில்லை. ஏனெனில் அவன் 'பெல்லராபனை' விட்டுக் கீழிறங்குவதற்கு முன்னமேயே, அவனைத் தென் அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள ஸைண்ட் ஹேலினு தீவில் கொண்டு போய் விட்டுவிடும்படி உத்திரவு வந்துவிட்டது.

எல்பா தீவில் இருந்தபொழுது, அது தனிமை யாகவிருந்தாலும், அவ்விடத்தில் ஒரு அரசன் என்ற பெயரை வகித்துக்கொண்டிருந்த நெப்போலி யன், இப்பொழுது ஸெண்ட் ஹெலினு தீவில்-ஐரோப் பாவிலிருந்து 6000 மைல்கள் தூரமுள்ள ஸெண்ட் ஹெலினு தீவில்—ஒரு கைதியாக அடைக்கப்பட் டான். அந்தத் தீவைச் சுற்றி வந்தாலும் 21 மைல் களுக்கு மேலிராமல் அவ்வளவு சிறியதாக அத்தீவு இருந்தது. அதில் கறடு முறடான கருப்பு மலைக் குன்றுகள் தவிர, வேறொன்றும் புலப்படாது. அந் த்த தீவைப் பார்த்தவுடன நெப்போலியனுக்கு, அடங்காத வெறுப்புண்டாயிற்று. அப்பேர்ப்பட்ட தீவில் நெப்போலியன், தன் ஆயுள் பரியந்தம் காலங் களைக் கஷ்டமாகக் கழிக்கும்படி விடப்பட்டான்.

பெரும் பரிதாபம்! உலகம் முழுவதும் பெயர் பெற்றும், தானே அரசர்களை நியமிக்கவும் எடுக்க வும கூடிய சக்தியை அடைந்தும், பெரிய ராஜ்ஜியங் களை ஆண்டு கொண்டும் வந்த நெப்போலியனுக்கு இப்பொழுது உலகத்தில் ஒன்றுமில்லை! ஐந்து வரு ஷங்களுக்குப் பிறகு, நெப்போலியன் தன் மனந் தளர்ந்து, பிரான்ஸ் தேசத்தை நினைத்துக்கொண்டே உயிர் துறந்தான். அவனுடைய பிரேதத்தையும் பெட்டியிலடைத்து, அதை ஆங்கிலேயர்களே எடுத் துக்கொண்டு போய் மாரங்கோவிற்குச் சென்றார்கள். அப்பொழுது நெப்போலியனுக்காக—அவன் சத்து ருவாயிருந்தாலும்—அவனுடைய வீரத்தன்மையை

உத்தேசித்துக் குண்டுகள் போட்டார்கள். அப்பால் 18 வருஷங்களுக்குப் பிறகு, பிரிட்டிஷாரின் உத்திரவின் பேரில், பிரெஞ்சுக்காரர்கள் நெப்போலியனின் பிரேதப் பெட்டியை எடுத்துத் தங்களுடைய தேசத்திற்குக் கொண்டு போய் நெப்போலியன் உயிருடனிருக்கும் பொழுது இஷ்டப்பட்டபடியே, பிரான்ஸ் தேசத்தில் ஸெயின் என்னும் நதிக்குப் பின்னால் மிகுந்த மரியாதையுடனும் கௌரவத்துடனும் அடக்கஞ் செய்தார்கள்.

அளவற்ற கர்வமடைந்தவர்களுக்குக் கடைசியில் தோல்வி நிச்சயமான சங்கதி. இதற்கு நெப்போலியன் சரித்திரமே தகுந்த திருஷ்டாந்தம்.



Printed at the Wednesday Review Press, Trichinopoly.